

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ரூபாய் 65 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாருதல், தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை நேற்று (30.08.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், உயர் அதிகாரிகள் டாக்டர் டி.ஜி.வினய், கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை உயர்த்தி உத்தரவு !

### சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,545/- பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/-

# நெல் கொள்முதல் நிலையங்களில் செப்டம்பர் 1 முதல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது!

## விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஆக.31-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் வாழும் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்காக விவசாயிகள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன்களைக் காப்பதே திராவிட மாடல் அரசின் உன்னத நோக்கங்களில் ஒன்று என்று விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறார்கள்.**

ஒன்றிய அரசு 2025-2026ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விலையை தற்போது நிர்ணயித்துள்ளது. ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்கும் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தமிழ்நாட்டின் நலம் காத்து வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு இந்த ஆண்டில் நிர்ணயம் செய்துள்ள சன்னரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,389 என்பதை ரூ.2,545 என உயர்த்தியுள்ளார்கள்.

அதே போல, பொதுரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,369 என்பதை ரூ.2,500 என உயர்த்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலையில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 1.9.2025 முதல் 31.8.2026 வரை விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும். இதற்கான முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவு 29.8.2025 அன்று அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி, இந்த ஆண்டில் விவசாயிகளிடமிருந்து மொத்தம் 42 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இதில் சன்ன ரக நெல் 30 இலட்சம் மெட்ரிக் டன். பொது ரக நெல் 12 இலட்சம் மெட்ரிக் டன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இது வரை இல்லாத அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் 2024 2025 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 51 மாத கால ஆட்சியில் இது வரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 44 ஆயிரத்து 777 கோடியே 83 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் திராவிட மாடல் அரசு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஊக்கத் தொகை மட்டும் 2 ஆயிரத்து 31 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரும்பாடுபட்டு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லில் ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்ற உன்னத இலட்சியத்துடன் கொள்முதல் செய்யப்படும் நெல்லை திறந்த வெளியில் வைத்திடக் கூடாது என்பதற்காக 827 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்களைக் கட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளின் வாழ்வாரத்தை உயர்த்தும் வகையில் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை தற்போது உயர்த்தியுள்ளது விவசாயி களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி இருவரும் நேற்று (30.8.2025) நேரில் சந்தித்து நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தந்து விவசாயி களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

### டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்றுபட்ட திருச்சி மாவட்டம், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் மற்றும் திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, கடலூர் மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள் கூட்டம் 03.09.2025 காலை 10.00 மணியளவில் திருச்சியிலுள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.


எனவே சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் கே.என்.நேரு**
மண்டலப் பொறுப்பாளர்
கழக முதன்மைச் செயலாளர், தி.மு.க.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை தென்மேற்கு மாவட்டகழக பிரதிநிதி சிவசங்கர் மகன் ஆகாஷ் – கோபிகா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்கள் கலைஞரும் – கழகமும் போல, கழகத்தலைவர் அவர்களும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு, எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை தென் மேற்கு மாவட்டக்கழகம் – மயிலை மேற்கு பகுதி அவைத்தலைவர் ஜி.ஆர்.இராஜேந்திரன் மகன் கார்த்திக்ராஜ் – ஸ்ரீயோகலக்குமி இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்கள் வாழ்வில் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நே.சிற்றரசு தலைமை! 109வது வட்டச் செயலாளர்

# க.சிட்டிபாபு - சுமதி இல்லத் திருமண வரவேற்பு விழா!

## தயாநிதி மாறன் எம்.பி. – அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, ஆக.31-*

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி, 109வது வட்டக் கழகச் செயலாளர் க.சிட்டிபாபு - சுமதி சிட்டிபாபு ஆகியோரின் சகோதரர் - மாவட்டப் பிரதிநிதி க.ராமமூர்த்தி - ரா.சுகந்தி ஆகியோரின் புதல்வி ஆர்.ஜெயஸ்ரீக்கும், இரத்தினசாமி நாகசுந்தரம் - கோமதி ஆகியோரின் புதல்வர் ஆர்.ஜேம்ஸ் பாபுக்கும் மணவிழா வரவேற்பு நாளை (1.9.2025 - திங்கள்கிழமை) மாலை 7 மணியளவில் கோவிலம்பாக்கம், துரைபாக்கம் -



பல்லாவரம் ரேடியல் சாலையில் அமைந்துள்ள பி.ஆர். பேலஸ் கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

அன்பகம் கலை, மருத்துவர். எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., வினோத் வேலாயுதம், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மா.பா.அன்புதுரை, எஸ்.வி.ரவிசந்திரன், ஜெ.கே.மணிகண்டன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் தயாநிதிமாறன் எம்.பி., அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன்,தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., இனிகோ எஸ்.இருதயராஜ் எம்.எல்.ஏ.,ந.இராமலிங்கம், ச.பரமசிவம், எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.காமராஜ், து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ப.பிரகாஷ், ச.அசோக் குமார், வி.ஆர்.விஜய், மு.சீனிவாசன், ஜி.வி.சரவணன், லதா பிளாரன்ஸ், திருமலை பொன்னுரங்கம், டி.எஸ்.ராஜா, சாரதி மணிமாறன், மெய்.சண்முகம், மு.செந்தில்குமார், டேவிட் இன்பராஜ் குணசேகரன், வரதை த.பரிதினேஷ் மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

109வது வட்ட முன்னாள் துணைச் செயலாளர் பாஷா குமார் நன்றி கூறுகிறார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

# எம்.விநாயகமூர்த்தி - எம்.ராதிகா எம்.சி. இல்லத் திருமண வரவேற்பு விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

*சென்னை, ஆக. 31 -*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தியின் சகோதரி மகளும், 174 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ராதிகா - க.சீனிவாசன் ஆகியோரின் புதல்வி சீ.நிவேதாவுக்கும், சென்னை, அடையார் மு.ராஜேந்திரன் - ரா.செந்தமிழ்செல்வி ஆகியோரின் புதல்வர் ரா.கலைவாணனுக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (31.08.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவுக்கு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

துரை கபிலன், வேளச்



சேரி வே.ஆனந்தம் எம்.சி, அரிமா சு.சேகர், அடையார் சி.சுரேஷ், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி, அடையார் பி.ஜெ.பாஸ்கர், ஆர்.பாலசுந்தரம், பெ.ராஜி, அ.ரவிகிருஷ்ணன், த.செல்வம், கி.ஆனந்த், ப.சின்ன தம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமண வரவேற்பு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமண வரவேற்பு விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், சா.சி.சிவசங்கர், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி, மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், பூச்சி எஸ்.முருகன், அன்பகம் கலை, அன்பகம் செந்தில், நே.சிற்றரசு எம்.சி, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜெ.எம்.எச்.அசன் மௌலானா எம்.எல்.ஏ,

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என். ரகுபதி, கே.இ. பிரகாஷ் எம்.பி, ப.அப்துல்மாலிக், க.பிரபு, நா.இளையராஜா, ஜி.பி.ராஜா, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த் குமார் மற்றும் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, க.தனசேகரன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகி பாண்டியன் மற்றும், மண்டலக் குழுத் தலைவர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எம்.அஜித், எஸ்.பாலாஜி, ஆர்.கபாலி, ஆர்.ஆண்ட்ரூ, பி.சரத், எஸ்.ராஜ்குமார், எம்.வேலன், எஸ்.கார்த்தி, இ.ராம்குமார், ஆர்.நவீன் பாரதி, ஆர்.யுகந்திரன், எம்.தமிழ்தாசன், இ.அரவிந்த் ஆகியோர் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றனர்.






காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஏகனாம் பேட்டை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் மாவட்ட கழக செயலாளர். க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டு நலத்திட்டங்கள் வழங்கினார். உடன் வட்டாட்சியர். மோகன் குமார் வட்டார வளர்ச்சி அலுவலர். திருமதி. கோமளா. ஒன்றிய குழு உறுப்பினர்கள் திருமதி. கமலா சண்முகம். டி சஞ்சய் காந்தி ஒன்றிய இளைஞரணி வி. குமரன், கார்த்திக் குமார். லோ ரமேஷ் எஸ் எஸ் கே சத்யா உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சோழிங்கநல்லூர் தொகுதி, வார்டு 181, கொட்டிவாக்கத்தில், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.80,65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் மார்கெட் கட்டடத்தினை, மாவட்டச் செயலாளர் அமைச்சர் .மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இதில் அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., துணை ஆணையர் அப்தாப் ரசூல், பகுதிச் செயலாளர்கள் மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், கல்விக்குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், மண்டல 14 அலுவலர் சுரேஷ், மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன், வட்டச் செயலாளர் சாந்தப்பன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அருண்குமார், பார்த்திபன், பரிமேலழகர், கழக நிர்வாகிகள், முன்னணியினர், மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.